# *மாற்று அரசியல் பண்பாடு நோக்கி...*

## மாநில அளவிலான கள ஆய்வு முடிவுகள்

### *ஆய்வுப் பின்னணி*

லொயோலா கல்லூரியின் ஊடக ஆய்வியல் புலம், தமிழக மக்களின் பண்பாட்டு-அரசியல் தளங்களில் நிகழ்ந்துவரும் ஒருங்கிணைந்த மாற்றங்களின் போக்குகளையும், அப் போக்குகளின் பின்னால் உறைந்துள்ள மாற்று அரசியல் பண்பாட்டுக்கான ஏக்கங்களையும் மாநில அளவிலான கள ஆய்வுகள் மூலம் தொடர்ந்து பதிவுசெய்து வருகிறது. கல்விநிலையப் பின்புலத்தில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வுகள் நூலகங்களில் நுடங்கிவிடாமல் மீண்டும் மக்களிடம் எடுத்துச் செல்லப்படவேண்டும் என்ற நோக்கத்தில், ஒவ்வொரு சுற்று ஆய்வுக்குப் பின்னும் ஊடகத்துறையினர் சந்திப்பு நடத்தப் படுகிறது. அத்துடன், ஆய்வு முடிவுகளை ஆழமாக அலசிப் பார்க்க மாணவர்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுக்கான ஆய்வரங்குகளும் நடத்தப்படுகின்றன.

கடந்த மே மாதம் நடந்த சட்டமன்றத் தேர்தலின் பின்புலத்தில், மூன்று சுற்று மாநில அளவிலான ஆய்வுகள் மூலம் (நவம்பர் 2005-ஜனவரி 2006 மற்றும் 2006 ஏப்ரலில் இரு சுற்றுகள்), தமிழக மக்களின் எண்ணப் போக்கில் நிகழ்ந்து வந்துள்ள தொடர் மாற்றங்கள் மிகத் துல்லியமாகப் பதிவுசெய்யப்பட்டன. தொடர்ந்து நடந்த மதுரை மத்தியத் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தல் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களை ஒட்டி, சமூக-உளவியல் அணுகுமுறையில், “கருத்தோட்ட வரைவு” (perceptual mapping) என்னும் உத்தியைப் பின்பற்றித் தமிழக அளவில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது (செப்டம்பர் 28-அக்டோபர் 3).

திமுக ஆட்சிப் பொறுப்பேற்று ஆறு மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அரசு மற்றும் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளைக் குறித்த மக்களின் மதிப்பீட்டினைப் பதிவுசெய்ய, மக்கள் ஆய்வு மையத்துடன் இணைந்து, களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இரு கட்டங்களாக (நவம்பர் 7-16, டிசம்பர் 10-14) நடைபெற்ற இந்த ஆய்வில் பேராசிரியர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், பல்துறை மாணவர்கள் என 40-க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டனர். நீலகிரி தவிர்த்த அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 2943 பேரிடம் (முதல் கட்டம் 2013, இரண்டாம் கட்டம் 930) கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

தமிழ்ப் பண்பாட்டு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, ***பேரா. டாக்டர் ராஜநாயகம்*** உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* (social-psychological approach) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டுள்ளது.

### *பங்கேற்றோர் பின்னணி*

களஆய்வில் பங்கேற்றோரில் 35.2 பெண்கள். வயதுரீதியாக, 25 வயது வரை 18.7, வயது 26 முதல் 35 வரை - 37.4, வயது 36 முதல் 45 வரை - 31.6 (மீதி - வயது 45-க்கு மேல்). சாதிரீதியாக, தாழ்த்தப்பட்டோர் - 21.6, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 22.6, பிற்படுத்தப்பட்டோர் - 54.2 (மீதி - பிற இனத்தினர்).

மதரீதியாக, இந்து மதத்தினர் - 87.3, கிறிஸ்தவர் - 5.4, இஸ்லாமியர் - 6.9 (மீதி - பிற மதத்தினர்). கல்வியைப் பொருத்த மட்டில், பெரும்பாலோர் (49.0) வகுப்பு 6 முதல் 12 வரை படித்துள்ளவர்கள் (வகுப்பு 5 வரை - 28.7, கலைசார் கல்லூரிக் கல்வி - 15.2, தொழில்சார் கல்லூரிக் கல்வி - 5.5, மீதி - பிறவகைப் படிப்புக்கள்).

தொழில்ரீதியாக, கூலி/விவசாயிகள் - 38.4, சொந்தத் தொழில் செய்வோர் - 32.6, தனியார் நிறுவனத்தில் வேலை செய்வோர் - 9.4, அரசு ஊழியர் - 4.5, மீதி - வேலையற்றோர் / வேறு வேலைகள்).

# தமிழக மக்களின் ஊடக நுகர்வு

***01. பிடித்த நடிகர்:***

தற்போது களத்தில் இருக்கும் நடிகர்களில் தமிழக மக்களுக்குப் பிடித்த ஆண் நடிகர்களில் ரஜினிகாந்தும் பெண் நடிகர்களில் அஸினும் முதலிடத்தில் இருக்கின்றனர். முதல் ஐந்து இடங்களில் இருப்போரைக் குறித்த விவரம்:

| | | |
|---|---|---|
| **01.** | **ரஜினிகாந்த்** | **15.6** |
| 02. | விஜய் | 14.2 |
| **03.** | **விஜயகாந்த்** | **12.6** |
| 04. | அஜித் | 11.1 |
| **05.** | **கமல்** | **8.3** |

| | | |
|---|---|---|
| **01.** | **அஸின்** | **14.1** |
| 02. | ஜோதிகா | 11.8 |
| **03.** | **சிநேகா** | **8.9** |
| 04. | திரிஷா | 7.5 |
| **05.** | **சிம்ரன்** | **6.1** |

ஏதாவது ஓர் ஆண் நடிகரைப் பிடித்துள்ளது என்போர் அனைவருமே அந்தந்த நடிகருடைய ரசிகர்மன்ற உறுப்பினரல்ல என்பது கவனிக்கத் தக்கது (பதிவுசெய்யப்பட்ட மன்ற உறுப்பினர் - 11.8, மன்ற உறுப்பினர் அல்ல, ஆனால் தீவிர ரசிகர் - 42.2, ரசிகர் அல்ல, ஆனால் அவர் மீது அபிமானம் உண்டு - 35.8).

ரசிகர் மன்றங்களின் செயல்பாடுகளைப் பொருத்த வரை, இம் மன்றங்கள் பயனுள்ள சமூகசேவை செய்வதாகக் கணிசமானோர் (36.0) கருதினாலும், பெரும்பான்மையோர் கருத்து எதிர்மறையாகவே உள்ளது. கட்-அவுட் வைப்பது போன்றவற்றில் பணத்தை விரயம் செய்கின்றனர் (25.1), மன்றம் என்ற பெயரில் வசூல் வேட்டை நடத்தி அராஜகம் செய்கின்றனர் (17.4), சும்மா ஒரு விளம்பரத்திற்காக மன்றம் நடத்துகின்றனர் (12.2) ஆகிய கருத்துக்கள் குறிப்பிடத்தக்கவை.

எனினும் ரசிகர் மன்றங்களைத் தடைசெய்வதற்கு ஏகோபித்த ஆதரவு வெளிப்படவில்லை (தடைக்கு ஆதரவு - 42.7, எதிர்ப்பு - 57.3).

***02. நடிகர்களின் அரசியல் ஈடுபாடு:***

சினிமா நடிகர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பை விட அதிகமாக ஆதரவு பதிவாகியுள்ளது (ஆதரவு - 55.8, எதிர்ப்பு - 44.2).

***ரஜினிகாந்தைப் பொருத்த வரை,*** அவர் அரசியலுக்கு வரமாட்டார் என்பதே அறுதிப் பெரும்பான்மையினரின் (81.3) ஊகமாக உள்ளது.

***சரத்குமாரைப் பொருத்த வரை,*** அவர் தனிக் கட்சி தொடங்குவார் என ஊகிப்போர் 44.1 (நாடார் அமைப்புக்களின் ஆதரவோடு - 23.5, ரசிகர்களின் ஆதரவோடு - 20.6). அவர் கட்சி தொடங்க மாட்டார் (41.6), மீண்டும் திமுக-வில் சங்கமித்து விடுவார் (14.2) ஆகியவை குறிப்பிடத்தக்க பிற ஊகங்கள்.

***03. முதல்வர் கருணாநிதிக்கு விழா:***

முதல்வர் கருணாநிதியைப் பாராட்டித் திரைத்துறையினர் எடுத்த விழா பொருத்தமானது (27.2) என்ற கருத்தை விட *விமர்சனங்களே அதிகமாக* வெளிப்படுகின்றன. ஆட்சியில் இருப்பவர்களுக்குத் துதிபாடுவதே திரைத்துறையினரின் வழக்கமாகி விட்டது என்ற விமர்சனம் மிக அழுத்தமாக (56.6) பதிவாகியுள்ளது. திரைத்துறையினரின் பாராட்டைப் பெறவேண்டிய அவசியத்தில் முதல்வர் கருணாநிதி இல்லை (11.8) என்பது மற்றொரு குறிப்பிடத்தக்க கருத்து.

***04. வி.சி.டி. பிரச்சனை:***

வி.சி.டி.யில் திரைப்படம் பார்ப்பதைக் கடுமையான தண்டனை மூலம் முற்றிலும் தடுத்துவிடலாம் என *மூன்றில் ஒரு பங்கினர் மட்டுமே* (34.7) நம்பிக்கை தெரிவிக்கின்றனர். தியேட்டர் கட்டணம் குறையாத வரை வி.சி.டி. பிரச்சனை தொடரும் (28.0), இது அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விளைவு என்பதால் இதைத் தவிர்க்க முடியாது (24.7), வி.சி.டி.யைப் பிரச்சனையாகப் பார்க்காமல், இதற்கெனவே படங்கள் எடுக்கலாம் (7.9) ஆகிய பதில்கள் கவனத்திற்குரியவை.

*05. சினிமா சித்திரிக்கும் கல்லூரி:*

இன்றையக் கல்லூரி மாணவர்களைக் குறித்து சினிமாவில் காட்டப்படுவதற்கும் நிஜ வாழ்க்கையில் அவர்களுடைய நடத்தைக்கும் *எந்தச் சம்பந்தமும்* இல்லை *என்போர் 21.9 மட்டுமே.* சினிமா சித்திரிப்பு முற்றிலும் சரி (38.4), சினிமாவில் கொஞ்சம் மிகைப்படுத்தல் இருந்தாலும் பெரும்பாலும் சரி (7.7), ஓரளவுக்கு ஒத்துப்போகிறது (31.6) ஆகிய கருத்துக்கள் கவனத்திற்குரியவை.

*06. பிடித்த தொலைக்காட்சி / நிகழ்ச்சி:*

தமிழக மக்கள் வழக்கமாகப் பார்க்கும் ***தமிழ்த் தொலைக்காட்சி சேனல்களில்*** முதல் ஐந்து இடங்களில் இருப்பவை: சன் (64.6), சன் மியூசிக் (6.4), கே-டி.வி (6.3), ஜெயா (5.7), தூர்தர்ஷன்/பொதிகை (5.4).

விரும்பிப் பார்க்கும் ***தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில்*** முதல் ஐந்து இடங்களைப் பிடிக்கும் வடிவங்கள்: திரை/தொடர்பான நிகழ்ச்சிகள் (31.5), செய்தி (24.0), கதைத் தொடர்கள் (19.5), விளையாட்டு/கிரிக்கெட் (6.7), டாக் ஷோ (3.8).

நடுநிலையான, ***நம்பகமான செய்தியை வழங்கும் தொலைக்காட்சியாக*** அதிகமானோரால் கருதப்படுவது தூர்தர்ஷன்/பொதிகை (46.8). அதைத் தொடர்ந்து வருபவை: சன் (17.6), ராஜ் (10.0), ஜெயா (3.2), மக்கள் (2.1), சன் நியூஸ் (2.1).

*07. சிறார்களும் தொலைக்காட்சியும்:*

பதினான்கு வயதுக்குட்பட்ட சிறார்கள் தொலைக்காட்சி பார்க்கும் போது, பெற்றோர்கள் / பெரியவர்கள் அவர்களுடன் சேர்ந்து பார்க்கும் பழக்கம் பரவலாக உள்ளது (47.9). சில குடும்பங்களில், சிறார்கள் பார்க்கும் நிகழ்ச்சிகளை அவர்களுக்கு விளக்கிச் சொல்லும் பழக்கமும் உள்ளது (13.7). எனினும், *தொந்தரவைத் தவிர்ப்பதற்காகக்* குழந்தைகளைத் தொலைக்காட்சி பார்க்க விடுவோர் எண்ணிக்கையும் கணிசமாக (28.0) உள்ளதும் கவனத்திற்குரியது.

தமிழகச் சிறாரிடையே அதிக வரவேற்பைப் பெற்று, அவர்களால் ***"இமிடேட்" செய்யப்படும் கதாபாத்திரங்களில்*** முதலிடம் சினிமா நட்சத்திரங்களுக்கும் (18.4), அடுத்த இடம் பவர் ரேஞ்சர்ஸூக்கும் (16.4) செல்கின்றன. தொடர்வன: ஸூப்பர்மேன் (4.7), விளையாட்டு வீரர்கள் (4.0), ஸ்பைடர்மேன் (3.3).

*08. பிடித்த வானொலி / நிகழ்ச்சி:*

வழக்கமாகக் கேட்கும் *வானொலி வரிசையில்* முதலிடம் பெறுவது அகில இந்திய வானொலியின் பண்பலை (27.7), அடுத்த இடத்தில் சூரியன் எஃப்.எம். (24.9).

வானொலி *நிகழ்ச்சிகளில்* அதிகமானோர் (57.1) விரும்பிக் கேட்பது திரைப்பாடல்கள் (செய்தி - 7.1, நேர்முகம் - 2.3, வானொலி கேட்பதில்லை - 31.7).

*09. பிடித்த பத்திரிக்கை / வடிவம்:*

வழக்கமாக வாங்கும் / வாசிக்கும் / வாசிக்கக் கேட்கும் தமிழ்த் தினசரிகளில் தினத்தந்தி முதலிடம் வகிக்கிறது (45.9). அடுத்த இடங்களில், தினமலர் - 20.3, தினகரன் - 16.0, தினமணி - 4.4.

மாலை இதழ்களில்: மாலை முரசு - 15.6, மாலை மலர் - 7.8, தமிழ் முரசு - 4.1.

வார இதழ்களில்: குமுதம் - 12.0, குங்குமம் - 10.5, ஆனந்த விகடன் - 8.0.

புலனாய்வு இதழ்களில்: நக்கீரன் - 12.3, ஜூனியர் விகடன் - 11.1, குமுதம் ரிப்போர்ட்டர் - 3.2.

பத்திரிக்கைகளில் அதிகம் விரும்பிப் படிக்கும் பகுதிகளாக அரசியல் (42.3), குற்றம்/புலனாய்வு (7.9), விளையாட்டு (6.6), சினிமா (6.0), கிசுகிசு (2.9) ஆகியவை இடம்பெறுகின்றன.

## தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்

### *10. கலப்புத் திருமணம்:*

சாதிவிட்டுச் சாதி கலப்புத் திருமணம் செய்வதற்குப் *பெருவாரியான ஆதரவு* வெளிப்படுகிறது. எந்தச் சாதியாய் இருந்தாலும் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிப்போர் 71.9, கலப்புத் திருமணம் என்பதை முழுமூச்சாக எதிர்ப்போர் 15.6 (பிற பதில்கள்: தம் சாதிக்கு இணையான அல்லது உயர்ந்த சாதி என்றால் மட்டும் - 6.4, பிறர் - தம் சாதியின் உள் பிரிவு என்றால் மட்டும்).

### *11. தனியார் துறையில் இடஒதுக்கீடு:*

சாதி அடிப்படையில் தனியார் துறையிலும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கு *ஆதரவு அதிகம் இருந்தாலும் எதிர்ப்பும் வலுவாக* வெளிப்படுகிறது (ஆதரவு - 56.5, எதிர்ப்பு - 43.5).

சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டில் வசதியானோரை (creamy layer) *சேர்க்கக்கூடாது என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவு* - 48.1, எதிர்ப்பு - 38.1. எஸ்.ஸி./எஸ்.டி. தவிர்த்த பிற சாதிகளில் வேண்டுமானால் வசதியானோரைத் தவிர்த்துவிடலாம் என்ற கருத்தும் குறிப்பிடத்தக்க அளவில் (12.3) முன்வைக்கப்பட்டுள்ளது.

### *12. நாத்திகமும் ஆத்திகமும்:*

இன்றையச் சூழலில் கடவுள் மறுப்பு / நாத்திகக் கொள்கை பொருத்தமானதாகக் கருதுவோர் 26.0, பொருத்தமற்றது என்போர் 74.0. எனினும் தனிப்பட்ட அளவிலான கடவுள் நம்பிக்கையைப் பொருத்த வரையில் *மிகப் பெரும்பாலோர் (90.4) கடவுளை நம்புவதாகத்* தெரிவிக்கின்றனர்.

கடவுள் மறுப்புக் கொள்கையில் *உறுதியான கட்சி/அமைப்பாகப்* பெரும்பாலோரால் அங்கீகரிக்கப்படுவது திராவிடர் கழகம் (70.8).

மக்களில் மிகப் பெரும்பாலோர் *பில்லிசூனியம், செய்வினை* போன்றவற்றை நம்பவில்லை (83.1). எனினும், *வாஸ்து, சோதிடம், பெயர் மாற்றம்* போன்றவை வரும்போது இவற்றை நம்பாதவர்கள் எண்ணிக்கை 71.7 ஆகக் குறைகிறது. இதுவே *சகுணம் / நல்லநேரம்* பார்த்தல் என்று வரும்போது இவற்றை நம்பாதவர்கள் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து 66.4 ஆகிறது.

### *13. மத அரசியல்:*

மத உணர்வுகளைத் தூண்டும் *அரசியல்வாதிகளின் அணுகுமுறைக்கு எதிரான* கருத்துக்களை முன்வைப்போர் 86.7 (தவறானது/கண்டிக்கத்தக்கது - 82.2, மதத்தையும் அரசியலையும் கலக்காமலிருப்பதே நாட்டுக்கு நல்லது - 4.5). ஆதரவான கருத்துக்களை முன்வைப்போர் 13.0 (மதமும் அரசியலும் கலந்த இந்தியச் சூழலில் இது தவிர்க்க முடியாதது - 7.0, மதங்களிடையே கலகத்தை மூட்டாதவரை தப்பில்லை - 6.0).

மதரீதியான அமைப்புகளைத் *தடை செய்வதற்கு ஆதரவாக* 62.7 (மதக் கலவரங்களைத் தூண்டும் தீவிர அமைப்புகளுக்கு மட்டும் தடை - 29.6, மதச்சார்பற்ற இந்திய நாட்டில் எல்லா மத அமைப்புகளுக்கும் தடை - 33.1), தடைசெய்ய எதிராக 37.3 (சுதந்திர நாட்டில் சட்டத்திற்குட்பட்டு இயங்கும் எந்த அமைப்பையும் தடைசெய்யத் தேவையில்லை - 27.2, அமைப்புகளைத் தடைசெய்வதற்குப் பதிலாகக் கலவரத்தைத் தூண்டாமல் கட்டுப்படுத்த வேண்டும் - 10.1).

சிறுபான்மையினர் அனுபவித்துவரும் *தனிப்பட்ட உரிமைகள்* குறித்து எதிர்ப்பை விடச் சற்று அதிகமாக ஆதரவு பதிவாகியுள்ளது (ஆதரவாக - 56.5, எதிராக - 43.5).

## அரசியல் கண்ணோட்டம்

### *14. உள்ளாட்சித் தேர்தல்:*

நடந்து முடிந்துள்ள உள்ளாட்சித் தேர்தலை நினைத்தவுடன் தமிழக மக்கள் மனதில் தோன்றும் பிம்பங்களும் உணர்ச்சிகளும் ஒரு கலவையாக வெளிப்படுகின்றன. மக்களிடையே அழுத்தமாக வெளிப்படும் முதல் ஐந்து பிம்பங்களும் உணர்ச்சிகளும்:

| பிம்பம் | |
|---|---|
| நேர்மை | 49.0 |
| வன்முறை | 24.1 |
| குழப்பம் | 7.6 |
| பணம் | 5.4 |
| சாதிப் பற்று | 2.1 |

| உணர்ச்சி | |
|---|---|
| மகிழ்ச்சி | 49.2 |
| கோபம் | 18.9 |
| சலிப்பு | 8.0 |
| ஏமாற்றம் | 6.0 |
| விரக்தி | 3.2 |

### *15. சிக்குன் குன்யா தடுப்பு:*

சிக்குன் குன்யா காய்ச்சலைத் தடுக்கத் திமுக அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு மக்கள் மத்தியில் *ஏகோபித்த பாராட்டுக் கிடைக்கவில்லை.*

| | |
|---|---|
| பாராட்டுக்குரிய விதத்தில் உடனடி நடவடிக்கை | 36.4 |
| தாமதமான, ஆனால் சரியான நடவடிக்கை | 25.6 |
| உள்ளாட்சித் தேர்தலின் காரணமாக மெத்தனப் போக்கு | 16.0 |
| அரசின் அணுகுமுறை கண்டனத்திற்கு உரியது | 17.8 |

### *16. மழை நிவாரணப் பணிகள்:*

மழை நிவாரணப் பணிகளை மேற்கொண்ட விஷயத்திலும் திமுக அரசுக்குப் பெரிய அளவில் பாராட்டுக் கிடைக்கவில்லை.

| | |
|---|---|
| பாராட்டுக்குரிய விதத்தில் உடனடி நடவடிக்கை | 35.0 |
| கடந்த அதிமுக ஆட்சி செய்த அளவு வேகமில்லை | 28.1 |
| அரசின் அணுகுமுறை கண்டனத்திற்கு உரியது | 17.3 |

### *17. விலைவாசியைக் கட்டுப்படுத்துதல்:*

விலைவாசி உயர்வைப் பொருத்தவரை, ஒருசாரார் அதைப் புரிந்துகொள்ள முயல்வதும், மறுசாரார் திமுக அரசைக் குறைசொல்வதும் பதிவாகியுள்ளது.

| | |
|---|---|
| விலைவாசி உயர்வைத் தடுக்கத் திமுக அரசு தவறிவிட்டது | 46.1 |
| தற்போது அப்படியொன்றும் விலைவாசி ஏறிவிடவில்லை | 25.5 |
| விலைவாசியைக் கட்டுப்படுத்துவது மாநில அரசின் கையில் இல்லை | 19.7 |

### *18. கள் இறக்க/விற்க அனுமதி:*

கள் இறக்க/விற்க அரசு அனுமதிக்க வேண்டும் என்ற *கோரிக்கை நியாயமானது* என்ற கருத்து அழுத்தமாக (46.1) முன்வைக்கப்பட்டாலும், குடிகாரர்கள் பெருகிவிடுவார்கள் என்பதால் அதை அனுமதிக்கக் கூடாது என்பதும் வலுவாக (30.0) வெளிப்படுகிறது. *ஒட்டுமொத்த மதுவிலக்கை அமுல்படுத்தவேண்டும்* என்ற குரலும் சற்று ஓங்கியே (23.2) ஒலிக்கிறது.

### *19. லாட்டரிக்கு அனுமதி:*

லாட்டரி விற்க அனுமதிக்குமாறு அரசிடம் வைக்கப்படும் கோரிக்கைக்கு கணிசமான அளவில் (34.5) எதிர்ப்புத் தெரிவிக்கப்படுவதோடு, ஒட்டுமொத்தமாக *எல்லாச் சூதாட்டங்களையும் தடைசெய்ய வேண்டும்* என்பது பெரும்பான்மைக் கருத்தாக (46.5) உள்ளது. இக் கோரிக்கை நியாயமானது என்போர் 18.1 மட்டுமே.

### *20. சென்னைக்குத் துணை நகரம்:*

திமுக அரசு முன்வைக்கும் சென்னைக்குத் துணைநகரத் திட்டத்திற்குப் *பெரும்பாலோர் (67.6) ஆதரவு* தெரிவிக்க, மிகச் சன்னமான அளவிலேயே (8.7) எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. அனைத்துக் கட்சியினரையும் கலந்தாலோசித்து, விவசாயிகளுக்குப் பாதிப்பில்லாத வகையில் முடிவெடுக்க வேண்டும் என்ற கருத்துக்கும் ஓரளவு (18.8) ஆதரவு உள்ளது.

### *21. சிறப்புப் பொருளாதார மண்டலம்:*

சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கும் திட்டத்திற்கும் *பெரும்பாலோர் (61.9) ஆதரவு* தெரிவித்தாலும், அனைத்துக் கட்சியினரையும் கலந்தாலோசித்து, விவசாயிகளுக்குப் பாதிப்பில்லாத வகையில் முடிவெடுக்க வேண்டும் (26.1), பெரு முதலீட்டாளர்களுக்கு மட்டுமே ஆதரவான இத் திட்டத்தைக் கைவிட்டுவிடவேண்டும் (10.6) ஆகிய கருத்துக்களுக்கும் கணிசமான ஆதரவுள்ளது கவனத்திற்குரியது.

### *22. மதிப்புக் கூட்டு வரி:*

வரும் ஜனவரி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மதிப்புக் கூட்டுவரி (VAT) திட்டம் குறித்து *ஒருமித்த கருத்து வெளிப்படவில்லை.* வரி குறையும் என்பதால் மக்களுக்குப் பயனுள்ள திட்டம் (34.5), அமுலுக்கு வந்த பின்புதான் எதுவும் சொல்ல முடியும் (27.1), வியாபாரிகளுக்கு வேண்டுமானால் இதனால் பயன் இருக்கலாம் (24.8) ஆகிய பதில்கள் முக்கியமானவை. இதனால் விலைவாசி உயரும் (5.8), உலகவங்கி/பன்னாட்டு நிறுவனங்களின் வற்புறுத்தலுக்குப் பணிந்து இத் திட்டம் அமுலாக்கப்படுகிறது (4.8) ஆகிய பதில்களும் ஒரு சிலரால் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### *23. கேபிள் டி.வி.:*

கேபிள் டி.வி.யை அரசுடைமையாக்க முந்தைய அதிமுக அரசு கொண்டுவந்த மசோதாவைத் திமுக அரசு கைவிட்டது குறித்து *சம வலுவுள்ள இரு துருவங்களாகக்* கருத்துக்கள் பதிவாகியுள்ளன.

| | |
|---|---|
| மசோதாவைக் கைவிட்டது தவறு | - 51.3 |
| கைவிட்டது சரி | - 48.7 |

### *24. நுழைவுத் தேர்வு ரத்து:*

மருத்துவம், பொறியியல் முதலிய தொழிற் படிப்புகளில் சேர இதுவரை நடத்தப்பட்டு வந்த நுழைவுத் தேர்வை ரத்து செய்து இயற்றியுள்ள சட்டத்திற்கு முழுமையான ஆதரவு தெரிவிப்போர் 47.7. கிராமப்புற அரசுப் பள்ளிகளின் தரத்தை உயர்த்தாமல் இந்தச் சட்டத்தால் பயனில்லை (21.3), பொதுவாகவே தொழிற் கல்வி ஏழைகளுக்கு எட்டாக் கனியாக இருப்பதால், அவர்களுக்கு இந்தச் சட்டத்தால் எந்தப் பயனுமில்லை (13.5) ஆகிய *மக்களின் ஆதங்கங்கள்* கவனத்திற்குரியவை. இந்தச் சட்டத்தால் *தொழிற்கல்வியின் தரம் குறையும் ஆபத்து* இருப்பதாகவும் கணிசமானோர் (16.1) அச்சத்தை வெளிப்படுத்துகின்றனர்.

### *25. நீதிமன்ற வழக்கு மொழியாகத் தமிழ்:*

நீதிமன்ற வழக்கு மொழியாகத் தமிழ் பயன்படுத்தப்படும் என்ற அறிவிப்பு, திமுக அரசின் திட்டங்களிலேயே *தமிழக மக்களின் ஏகோபித்த வரவேற்பை* (76.5) பெற்றுள்ளது. இதற்கு *யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை* எனினும், தமிழ் தெரியாத நீதிபதிகள் மற்றும் ஆங்கிலத்தில் சட்டம் பயின்றுள்ள பெரும்பாலான வக்கீல்கள் எப்படிச் செயல்படுவார்கள் என்ற *சந்தேகம்* சற்று அழுத்தமாகவே (22.9) பதிவாகியுள்ளது.

### *26. தமிழ் தலைப்புக்கு வரிச் சலுகை:*

திரைப்படங்களுக்குத் தமிழில் தலைப்பு வைத்தால் வரிச்சலுகை வழங்கும் திமுக அரசின் திட்டத்திற்கு மக்கள் மத்தியில் *பெரிய வரவேற்பு எதுவுமில்லை.* வெறும் 11.6 மட்டுமே இதைப் பாராட்டப்பட வேண்டிய திட்டமாகக் காண்கின்றனர். வெறும் தலைப்புக்காக இல்லாமல், *கருத்துள்ள*

*படங்களுக்கு மட்டும் வரிவிலக்குத் தரலாம்* என்பதே நான்கில் மூவருடைய (76.0) கருத்து. பிறமொழிக் கலப்பில்லாமல் தமிழில் மட்டுமே வசனமுள்ள படங்களுக்கு விலக்குத் தரலாம் (8.2), அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும் இத் திட்டத்தைக் கைவிடவேண்டும் (4.0) ஆகியவை பிற கருத்துக்கள்.

***27. திமுக அரசின் பல்வேறு நலத் திட்டங்கள்:***

சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் திமுக அறிவித்திருந்த பல்வேறு நலத்திட்டங்களில், கடந்த ஆறுமாதங்களில் திமுக அரசு நிறைவேற்றியுள்ள / தொடங்கியுள்ள திட்டங்கள் குறித்த மக்களின் மதிப்பீடு:

| திமுக அரசின் திட்டம் | ஆதரவு | நி.ஆ. | எதிர்ப்பு |
|---|---|---|---|
| சத்துணவில் வாரம் இரண்டு முட்டை | 61.3 | 26.2 | 12.5 |
| **இரண்டு ரூபாய்க்கு ரேஷன் அரிசி** | **66.9** | **19.7** | **13.4** |
| ஏழைகளுக்குத் திருமண உதவி | 52.5 | 32.6 | 14.9 |
| **கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்கள் நியமனம்** | **47.8** | **33.8** | **18.4** |
| படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உத்திரவாதம் | 43.9 | 35.7 | 20.4 |
| **கூட்டுறவுக் கடன் தள்ளுபடி** | **43.0** | **33.5** | **23.5** |
| வேலையற்ற படித்த இளைஞர்களுக்கு கருணைத் தொகை | 40.0 | 33.1 | 26.9 |
| **இலவச கேஸ் அடுப்பு** | **27.7** | **38.2** | **34.1** |
| நிலமற்ற ஏழைகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் | 23.1 | 41.7 | 35.2 |
| **போலிஸ் துறைக்குச் சலுகைகள் / வசதிகள்** | **31.8** | **28.2** | **40.0** |
| சிறைக் கைதிகளுக்குக் கோழிக் கறி | 33.6 | 24.2 | 42.2 |
| **அரசு ஊழியர்களுக்குச் சலுகைகள்** | **29.1** | **28.4** | **42.5** |
| ஏழைகளுக்கு இலவச கலர் டிவி | 18.6 | 34.6 | 46.8 |

***நி.ஆ.*** - *நிபந்தனை ஆதரவு. அதாவது, இது நல்ல திட்டம்தான் என்பதில் உடன்பாடு இருந்தாலும் அதைத் தொடர்ந்து செயல்படுத்த முடியுமா என்ற சந்தேகம் தொக்கி நிற்க வழங்கப்படும் ஆதரவு.*

***28. முல்லைப் பெரியாறு பிரச்சனை:***

கேரள, தமிழக அரசுகளுக்கிடையேயான முல்லைப் பெரியாறு பிரச்சனையில் திமுக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் சரியான திசையிலேயே செல்வதாகக் கணிசமானோர் (32.6) கருதினாலும், அணுகுமுறையில் வேகத்தைக் கூட்டி, *மேலும் தாமதிக்காமல் நீதிமன்றத்தை அணுகவேண்டும்* என்ற கருத்தே பலராலும் (52.3) வலியுறுத்தப்படுகிறது. போராட்டத்தைக் கையிலெடுத்துக் கேரள அரசைப் பணியவைக்க வேண்டும் என்ற கருத்துக்கும் ஓரளவு (12.9) ஆதரவுள்ளது.

### *29. இலங்கைத் தமிழர் பிரச்சனை:*

இலங்கைத் தமிழர் பிரச்சனையைப் பொருத்தவரை, அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, *ஒருமித்த பார்வையை உருவாக்க வேண்டும்* (46.5), மத்திய/தமிழக அரசுகளின் தற்போதைய நிதானமான போக்கைத் தொடர வேண்டும் (25.8), இந்தப் பிரச்சனையில் இந்தியா தலையிடுமாறு வற்புறுத்த வேண்டும் (18.4) ஆகிய பார்வைகள் அழுத்தம் பெறுகின்றன.

### *30. ஆறுமாத திமுக ஆட்சியும் அதிமுக அரசியலும்:*

கடந்த ஆறு மாதங்களில் திமுக அரசு மேற்கொண்டுள்ள செயல்பாடுகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக மதிப்பீடு செய்கையில் வெவ்வேறு அளவுகளில் ஆதரவும் எதிர்ப்பும் வெளிப்பட்டாலும், அனைத்துச் செயல்பாடுகளையும் *ஒட்டுமொத்தமாக* மதிப்பீடு செய்கையில், திமுக அரசு குறித்துப் *பரவலான நல்லுணர்வு* வெளிப்படுகிறது. அதே வேளையில், ஆங்காங்கே முளைத்தெழும் *கசப்புணர்வுகள் திரண்டு எதிர்ப்பாக* வேர்விடத் தொடங்கியுள்ளன.

கடந்த ஆறு மாதங்களாகத் தமிழகச் சட்டமன்றத்தில் தலையாய எதிர்க்கட்சியாக விளங்கிவரும் அதிமுக-வின் ஒட்டுமொத்தச் செயல்பாடுகள் குறித்து *மிகையான அதிருப்தியே* வெளிப்பட்டாலும், *மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமாக ஆதரவும்* வெளிப்படுகிறது.

| 6 மாதங்களாக... | மிக நன்று | நன்று | பரவாயில்லை | மோசம் |
|---|---|---|---|---|
| ஆட்சியில் திமுக | 45.2 | 21.2 | 16.7 | 16.9 |
| எதிர்க்கட்சியாய் அதிமுக | 20.3 | 16.1 | 21.4 | 42.2 |

### *31. திமுக அரசின் நிலைதிறன்:*

கூட்டணிக் கட்சிகளின் "வெளியிலிருந்து ஆதரவுடன்" தனித்து ஆட்சிசெய்துவரும் திமுக அரசு இப்போதுள்ளபடியே *ஐந்தாண்டுகளும் நீடித்துச் சிறப்பாகச் செயல்படும்* எனப் பாதிக்கும் மேற்பட்டோர் (53.5) கருதுகின்றனர். *கூட்டணிக் கட்சிகளையும் அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டால் தடுமாற்றமின்றிச் செயல்பட முடியும்* என்ற கருத்தும் மிக வலுவாகவே (40.7) முன்வைக்கப்படுகிறது. மிகச் சிலர் (5.8) திமுக கூட்டணி உடைந்து, ஆட்சி கவிழும் எனத் தெரிவிக்கின்றனர்.

### *32. மாற்று அரசியல் சக்தியாக தேமுதிக:*

தமிழக அரசியல் களத்தில் முனைப்போடு உள்ள கட்சிகளுடன் தேமுதிக-வை ஒப்பிடுகையில், *திமுக/அதிமுக-வுக்குச் சரியான மாற்றாக* அக் கட்சி உருவாகும் என்ற எதிர்பார்ப்பைப் பெரும்பாலோர் (63.5) வெளிப்படுத்துகின்றனர் (பிற பதில்களில் முக்கியமானவை: மற்ற கட்சிகளை விட வலுவாக உருவெடுத்தாலும் திமுக/அதிமுக-வுக்கு மாற்றாக முடியாது - 9.5, காங்கிரஸ், பாமக போன்ற கட்சிகளுக்கு இணையாக உருவெடுக்கும் - 9.2, பேருக்குக் கட்சியாக இருக்கும் 17.0).

தேமுதிக இறுதி வரை *தனித்துச் செயல்படுவதே அக் கட்சியின் வளர்ச்சிக்கு நல்லது* என்ற ஊகத்தையும் பெரும்பாலோர் (60.1) தெரிவிக்கின்றனர் (கூட்டணி சேர்வதென்றால்: அதிமுக-வுடன் - 16.4, திமுக-வுடன் - 10.3, காங்கிரஸுடன் 8.7. மீதி - வேறு கட்சிகளுடன் கூட்டணி).

### *33. வாக்கு யாருக்கு?*

கடந்த ஆறுமாத திமுக ஆட்சியின் பின்னணியில், இன்று வாக்களிப்பதாக இருந்தால், முதலிடம் திமுக-வுக்குச் செல்கிறது. மிகக் குறைந்த இடைவெளியுடன், இரண்டாம் மூன்றாம் இடங்களில் அதிமுக-வும் தேமுதிக-வும் வருகின்றன.

| திமுக | அதிமுக | தேமுதிக |
|---|---|---|
| 39.7 | 23.9 | 21.4 |

(பிற கட்சிகளில்: காங்கிரஸ் - 4.5, இடதுசாரிகள் - 2.1, பாமக - 1.6, மதிமுக - 1.0, யாருக்கும் வாக்கு இல்லை - 1.6, இப்போது சொல்ல இயலாது - 2.9, மீதி - ஏனைய கட்சிகள்).

தற்போதுள்ள கூட்டணிகள் என்ற அளவில் பார்த்தால், கடந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகளோடு ஒப்பிடுகையில், *திமுக அணியின் வாக்கு வங்கி சிறிதளவு வளர்ந்து*, 48 விழுக்காட்டினை எட்டியுள்ளது. ஆனால் *தேமுதிக-வின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில்* உள்ளது. அதிமுக-வுக்கு ஏற்பட்டுள்ள *கணிசமான வாக்குச் சரிவு*, ஏறத்தாழ முழுமையாகவே தேமுதிக-வுக்கு ஆதரவான வாக்காக மாறியுள்ளது.

***எனினும் இந்த நிலை முடிவானதல்ல.*** திமுக அரசின் செயல்பாடுகளின் பக்கவிளைவாகக் கூட்டணியிலும் வாக்காளர் மத்தியிலும் அரும்பத் தொடங்கியுள்ள அதிருப்தி, அடுத்தடுத்து மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்கேற்ப அதன் வாக்கு வங்கியையும் ஊடறுத்துச் செல்லக்கூடும். தனித்துச் செயல்படும் நிலையில் தேமுதிக-வுக்குப் பெருகிவரும் ஆதரவு, அதன் தலைமை அடுத்து எடுக்கப்போகும் முடிவுகளுக்கேற்ப, தேங்கவும் சுருங்கவும் கூடும். அதிமுக-வின் செயல்பாடுகள் முடுக்கிவிடப்படும் பட்சத்தில், எதிர்க்கட்சியாக அதன் செயல்பாடுகளுக்குத் தற்போதுள்ள ஆதரவு வளரவும் கூடும்.

### *34. தமிழகத்தின் சிறந்த முதல்வர்:*

தமிழகத்தில் இதுவரை முதல்வர் பொறுப்பு வகித்துள்ளவர்களில், தாங்கள் அறிந்த வரை மிகச் சிறந்தவராக மக்கள் தேர்ந்தெடுத்தவர்களில் முதலிடம் எம்.ஜி.ஆருக்குச் செல்கிறது.

| | |
|---|---|
| எம்.ஜி.ஆர். | 44.2 |
| காமராஜர் | 31.0 |
| கருணாநிதி | 14.5 |
| ஜெயலலிதா | 4.2 |
| அண்ணாதுரை | 3.2 |

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர்
20 டிசம்பர் 2006

### *குறிப்பு:*

01. மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன.

02. பெரும்பாலான கேள்விகளுக்கு மக்களின் முக்கியமான கருத்துக்கள் மட்டுமே இந்த ஆய்வறிக்கையில் இடம்பெற்றிருப்பதால், சதவீதத்தின் கூட்டுத்தொகை 100-ஆக இருக்காது.

**நன்றி**

ஆய்வின் பல்வேறு நிலைகளில் பங்கேற்ற அனைவருக்கும்

ஊடக ஆய்வியல் புலம் & மக்கள் ஆய்வு மையம்
லொயோலா கல்லூரி, சென்னை 600 034